1974 சனவரி 21]

வரையிலே தேவை என்று மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டு மத்திய அரசு ஒவ்வொரு பட்டியலாக ஒப்புதல் தருகிறது. ஆகவே ஒப்புதல் வந்தவுடன் அவை விரைவாக நிறைவேற்றப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in Dharmapuri district many parts like Hosur and Denkanikotta which are hiily are experiencing great scarcity of drinking water in many villages. The wells are deep and the water in the wells is so little that ladies shed tears to draw water and the quantity of from them their tears is greater than the water they draw from the wells. The small Panchayats there say that they have no money for paying for water-supply schemes. The question is pending for long. May I know from the Hon. Minister for Health whether some arrangements would be made to give protected water-supply to these suffering tiny villages, irrespective of the money paid by the Panchayats?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தத் திட்டத்திலே இந்தப் பிரச்சனை வரவில்லை; ஆனல் பஞ்சாயத்துக்கள் நடத்து கின்ற சில திட்டங்கள் இருக்கின்றன. அவைகளிலேதான் பஞ்சாயத்து நிதிவசதிபற்றிய பிரச்சனை வரும். பொதுவாகவே சலுகை காட்டப்படவேண்டிய மாவட்டம் தருமபுரி மாவட்டம் என்ற அளவிலே தருமபுரி மாவட்டம் பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என்ற காரணத்தினலே இப்படிப்பட்ட திட்டங்கள் அங்கே நிறைவேற்றப்படுகின்றன.

அரிசன மாணவர் இல்லங்களுக்குக் கட்டடங்கள்

*** 39 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன மாணவர் விடுதிகளுக்கு படிப்படியாக நிரந்தரமாக சொந்தக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) அரிசன நல இல்லங்களுக்கு படிப்படியாக சொந்தக்கட்டடங்கள் கட்ட அரசு ஏற்கெனவே முடிவு செய்துள்ளது.

[1974 சனவரி 21

(இ) அரிசன நல இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்ட இந்தியன் வங்கியிலிருந்து ஒரு கோடி ரூபாய் கடனாகப் பெற அரசு முடிவு செய்தது. இக்கடன் தொகையை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நேரடியாக வங்கியிலிருந்து பெற்று இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்ட ஒரு திட்டம் வகுத்து இந்தியன் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. வங்கியிலிருந்து கடன் கிடைத்த உடன் வீட்டு வசதி வாரியம் மேற்படி திட்டத்தை செயல்படுத்தும். மாநிலத்தில் மொத்தம் சுமார் 8,300 தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைஜாதி மாணவ மாணவியருக்குக் கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, உத்தேசிக்கப்பட்டிருக்கக்கூடிய கட்டடங்களை எந்த அடிப் படையிலே அரசாங்கம் கட்ட இருக்கிறது. திருச்சி மாவட்டத் திற்கு இதிலே முன்னுரிமை தரப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிதரப்படும் என்று கூறினேன். மாநிலம் பூராவிலும் என்கின்றபோது திருச்சியும் அடங்கியிருக்க வேண்டும்.

* 40 வினா—**திரு. செ. சதாசிவம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், பொன்பரப்பி கிராமத்தில் 1973-74-ல் அரிசன மாணவர் விடுதிகளுக்கு கட்டடங் கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திருச்சிராப் பள்ளி மாவட்டம், பொன்பரப்பியிலுள்ள தாழ்த்தப்பட்டோருக் காக அரசினர் மாணவர் இல்லத்திற்கு கட்டடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, சில ஆண்டு களாகவே அங்கு போதுமான கட்டடங்கள் சரியான வாடகைக் குக் கிடைக்கவில்லை. ஆகவே இது எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.